**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. முதற்சங்கப் புலவர்களுக்கு இலக்கணமாக அமைந்தது எந்த நூல்?
2. பத்துப்பாட்டில் மிகச் சிறிய நூல் எது?
3. மருந்துப் பெயர் கொண்ட நீதி நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மாதவி எந்தச் சமயத்தைத் தழுவினாள்?
5. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று பாடியவர் யார்?
6. திவாகர நிகண்டின் ஆசிரியர் யார்?
7. பிரபந்தங்கள் எத்தனை வகைப்படும்?
8. நளவெண்பாவை இயற்றியவர் யார்?
9. குட்டித்தொல்காப்பியம் என்றழைக்கப்படும் நூல் எது?
10. 'சீறத்' என்ற அரபுச் சொல்லின் பொருள் யாது?
11. தமிழ் உரைநடையின் தந்தை எனப்படுபவர் யார்?

12. பெருங்கதை நூலின் ஆசிரியர் யார்?
13. தமிழில் விருத்தப்பாவால் எழுதப்பட்ட முதல் காப்பியம் எது?
14. பசிப்பிணியின் கொடுமையைக் கூறும் நூல் எது?
15. 'வாழும் தமிழ்' என்ற நூலை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. ஆற்றுப்படை நூல்களைக் குறிப்பிடுக.
2. களவழி நாற்பது – குறிப்பு வரைக.
3. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
4. மணிமேகலைக் கூறும் சீர்திருத்தக் கொள்கை யாது?
5. பெரியாழ்வார் பெற்ற பெண்கொடி யார்? அவர் பாடிய நூல்கள் யாவை?
6. இறையனார் களவியல் உரையின் தனிச்சிறப்பு யாது?
7. மணிப்பிரவாள நடை என்றால் என்ன?
8. மரபுக்கவிதை என்றால் என்ன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) எட்டுத்தொகை நூல்களில் உள்ள அக நூல்கள் குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) மணிமேகலை உணர்த்தும் அறச் சிந்தனைகள் குறித்து விளக்கி வரைக.

2. (அ) காரைக்கால் அம்மையாரின் சிவபக்தியை அவரின் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓட்டக்கூத்தர் படைப்புகள் குறித்து எழுதுக.

3. (அ) சிற்றிலக்கியங்களில் பள்ளு, சதகம், குறவஞ்சி நூல்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) உரைநடை வளர்ச்சி மற்றும் அதன் முன்னோடிகள் குறித்து விளக்கி வரைக.

***